3. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது தொடர்பாக கல்வியமைச்சர் அவைக்கு அளித்த அறிக்கையில் பிழை அல்லது தவறு இருப்பதாக விதி 113-இன் கீழ் சுட்டிக் காட்டுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து விதி 113-ன் கீழ் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 28—4—1993 அன்று சென்னை உயர்நீதிமன்றம், அரசு வழங்கிய 175 ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அங்கீகாரங்களை ரத்துச் செய்தது குறித்து பேரவைக்கு அளித்த பதிலுரையில் தவறான தகவல்கள் இருப்பதாகத் தெரிவித்து, அது குறித்து பேரவையில் எழுப்பிய ஒரு அறிவிப்பை திரு. ஜி. பழனிசாமி மற்றும் திரு. வே. தம்புசாமி ஆகிய இருவரும் கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வாறு விதி 113-ன் கீழ் எடுத்து விவாதிப்பதற்குரிய பொருள் என்பது பற்றி விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28-ம் தேதி ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பதில் அளித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அந்த 175 பள்ளிகள் அங்கீகாரம் ரத்து செய்தது குறித்து விளக்கம் தந்தார்கள். அந்த விளக்கத்திலே கல்வி அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது, 175 பள்ளிகளில் 98 பள்ளிகள் கோர்ட் உத்தரவின் மூலம் அனுமதி அளிக்கப்பட்டது. 59 பள்ளிகளுக்கு கோர்ட் வழி காட்டுதல் மூலம் அனுமதி அளிக்கப்பட்டது. 24 பள்ளிகளுக்கு அரசு அனுமதி வழங்கியது என்று பதிலுரையிலே குறிப்பிட்டார்கள். முதலமைச்சர் அவர்களும் அதையே வலியுறுத்தினார்கள். ஆனால் கல்வித்துறை இயக்குநர் மூலம் கோர்ட்டுக்கு ஒரு 'அபிடவிட்' கொடுத்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் கூறியிருப்பது 98 பள்ளிகள் சம்பந்தமாக உயர்நீதிமன்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டு, அது உச்சநீதிமன்றத்தில் பரிசீலனையிலே இருக்கிறது. 30—5—1994 வரை அரசே நேரடியாக அனுமதி வழங்கியது 116 பள்ளிகள். அடுத்து 30—5—1992 வரை அரசே நேரடியாக வழங்கியது 59 பள்ளிகள். ஆகவே, இந்த 116-ம், 59-ம் 175க்கு தான். அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை கோர்ட் ரத்து செய்திருக்கிறது. ஆகவே, அந்த 98-ம் முன்னாலேயே ரத்து செய்யப்பட்டு, அதாவது உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்த 175, 98 அரசு கோர்ட் உத்தரவின்பேரில் தான் வழங்கப்பட்டது என்பது ஒரு

சரியான தகவல் அல்ல. கல்வி இயக்குநர் அவர்களே, நேரடியாக 116 பள்ளிகளுக்கு அரசே கொடுத்திருக்கிறது. 59 பள்ளிகளுக்கு அரசே நேரடியாக கொடுத்திருக்கிறது என்று கூறியிருக்கிறார். எனவேதான், தவறான தகவலை அமைச்சர் அவர்கள் அவைக்கு அறிவித்திருக்கிறார்கள் என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இப்போது தரப் பட்ட உயர்நீதிமன்ற பெஞ்சினுடைய ஜட்ஜ்மெண் டிலேயிருந்து நான் படிக்கின்றேன். அந்த ஜட்ஜ்மெண் டிலே அதற்கு முன்னாலே ஹைகோர்ட் போட்ட உத்தர வுடன் ஒரு பகுதியை எடுத்துப் போட்டிருக்கிறார்கள். அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், அதை ஏற்கனவே மாண்புமிகு முதல்வர் அவர்களும் இங்கே படித்துக் காட்டி னார்கள். நானும் படித்துக் காட்டினேன்.

"As and when the applications are received by the Government from these institutions.....'from these institutions'...... என்றால் மைனாரிட்டி இன்ஸ்ட்டிட்யூசன்ஸ். ..'for grant of recognition the Govt. should consider all these relevant aspects and then provide temporary recognition within four weeks therefrom pending disposal of the Write Petition in which the validity of the aforesaid Government Order is challenged. With this direction the Government is directed to grant provisional recognition to all that minority institutions subject to the fulfilmen of the conditions setforth hereinabove. என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது அவர்கள் கொடுத்திருக்கிற கோர்ட் அனுமதி தந்திருக்கிற பள்ளிகள் தவிர வேறு சிறுபான்மைப் பள்ளிகள் அனுமதி கேட்டால் அது இந்த நிபந்தனை களுக்கு உட்பட்டு அதாவது அவர்களுக்கு எப்படித் தந்தார்களோ அதுபோல் இருந்தால் தரலாம் என்பது தான் டைரக்சன். அந்த அடிப்படையிலேதான் அரசு தந்திருக்கிறது. ஆகவே, இதை மீறி தந்தது மைனாரிட்டி அல்லாத பள்ளிகள். அதைத்தான் நான் சொல்லும்போது இந்துக்கள் நடத்துகின்ற பள்ளிகள் என்று சொன்னேன். ஆகவே, எல்லாமே முஸ்லீம்களும், கிறிஸ் தவர்களும் நடத்துகின்ற பள்ளிகளாக வருகிறபோது,

1993 ஏப்ரல் 30] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

இந்துக்கள் நடத்துகிற பள்ளிகளுக்கு அங்கீகாரம் கிடைக்காமல் இருக்கிறபோது அவர்கள் வந்து எங்களைக் கேட்கிற நேரத்தில் நாங்கள் தரவேண்டி இருந்தது, ஒரு சமூகநீதிபோல அதை நாம் தந்திருக்கிறோம்.

கணக்கைப் பொறுத்த மட்டில் கோர்ட்டிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் 'Hence we are constrained to quash all the orders of recognition passed by the Goverment and set out in Annexures V and VI' அப்படி என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது 5-வது, 6-வது அட்டவணையில் இருக்கிற அத்தனை பள்ளிகளையும் நாங்கள் ரத்து செய்கிறோம் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கூட்டிப் பார்த்தால் 175 தான் வருகிறது. ஆகவே, குழப்பம் எதனால் வருகிறது என்றால் 59 பள்ளிகளிலே தான் வருகிறது. இந்த 59 பள்ளிகளுக்கு ரிகக்னிஷன் இப்போது இந்த விசாரணையின்போது கிடையாது. அவர்களுக்கு 1992-டோடு முடிந்துவிட்டது. அவர்கள் பரீட்சை எழுதுவதற்கு மட்டும் தான் அனுமதி வாங்கியிருந்தார்கள். 31-5-1992-க்குப் பிறகு அந்தப் பள்ளிக்கூடங்கள் இல்லாததையும் சேர்த்து இவர்கள் ரத்து செய்தது போல மொத்தப் பள்ளிகள் 175 என்று சொன்ன காரணத்தினாலே தான் இந்த மாதிரி நிலை வந்தது. 98 வேறு, இந்த 175 வேறு. 59 பள்ளிகளே இல்லை. ரிகக்னிஷனே இல்லை. அது 31-5-1992-டோடு, அந்தப் பள்ளிகளினுடைய, அங்கீகாரம் இல்லை. ஆகவே, இப்பொழுது விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகிற நேரத்தில் 59 பள்ளிகள் கிடையாது. ஆகவே, மீதி இருக்கின்ற பள்ளிகளுக்கான 116 கணக்கைத் தான் மாண்புமிகு முதல்வர் அவர்களும் நாங்களும் சொல்லியிருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பின்னர், இப்பிரச்சினையில் மேலும் எவ்வித விவாதமும் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. வே. தம்புசாமி: 98, கோர்ட் உத்தரவிலே அது முடிந்து போகிறது. அதற்குப் பிறகு அரசால் வழங்கப்பட்டது 116, மறுபடியும் அரசால் வழங்கப்பட்டது 59.

676 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது தொடர்பாகக் கல்வி அமைச்சர் அவைக்கு அளித்த அறிக்கையில் பிழை அல்லது தவறு இருப்பதாக விதி 113-இன் கீழ் சுட்டிக் காட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் என்னிடத்திலும் கொடுத்திருக்கிறீர்கள். அரசால் வழங்கப்பட்டது 31-5-1992 வரையில்தான். அதற்குப் பிறகு இன்றைக்கு அது இல்லை. (குறுக்கீடு)

அது 31-5-1992 வரை. அதைத்தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

முற்பகல் 11-30

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்டவணை 5 மற்றும் 6— இரண்டையும் கூட்டினால் 175 தான் வருகிறது. அதைத்தான் ரத்து செய்திருக்கிறார்கள். நீதிமன்றம் ரத்து செய்ததாகச் சொன்ன கணக்கு 175. 59 என்பது, ரத்து செய்கிற நேரத்திலே, அந்தப் பள்ளிக்கூடங்களே இல்லை, அவற்றை ரத்து செய்ய வேண்டிய அவசியமே இல்லை. 31— 5— 1992 உடன் அந்தப் பள்ளிகள் மூடப்பட்டு விட்டன.

4. உரிமைப் பிரச்சினைகள்

(அ) அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பகுதியை 9--2-1993 ஆம் நாளிட்ட 'தினகரன்' பத்திரிகை வெளியிட்டது குறித்து— பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய அவை உரிமை மீறல் பிரச்சினை தொடர்பான தீர்ப்புரை:

திரு. குமரி அனந்தன் அவர்கள் 9-2-1993 அன்று தினகரன் நாளிதழில் வெளிவந்துள்ள ஒரு செய்தி குறித்து பேரவையில் ஓர் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பினார்கள். அதில், பேரவை உறுப்பினர் திரு. நடேசன் பால்ராஜ் அவர்கள் தன்னைக் குறிப்பிட்டு, தான் தொகுதிக்குப் போகவில்லை என்று சாட்டிய குற்றச்சாட்டை முறையற்றது என்று கூறி, அவைத் தலைவர் அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பின்னரும்,